# தீவகத்திலிருந்து இரவு திடீர் ஷெல் தாக்கு இளம்பெண் துடிதுடித்து பலி; பலர் காயம்

நீண்டகால இடைவெளிக்குப்பின்னர் தீவுப்பகுதி முகாம்களிலிருந்து யாழ்நகர் மக்கள் குடியிருப்புப்பகுதியை நோக்கி படையினர் நேற்று இரவு 8.40மணி தொடக்கம் கடும் ஷெல்தாக்குதல்களை மேற்கொண்டபோது வீட்டில் பாதுகாப்புத்தேடி இருந்த இளம் யுவதி ஸ்தலத்தில் பலியானார் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 3 வயதுக் குழந்தை உட்பட ஏழு பேர் படுகாயமடைந்த நிலையில் யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் யாழ் ஓட்டுமடம் முலலிம் பகுதியைச் சேர்ந்த வேலணை இரண்டாம் வட்டாரத்திலிருந்து இடம் பெயர்ந்து வசித்து வந்த இளம் யுவதியான செல்வி கவிதா இராசரட்ணம் (16) என்பவரே பலியானவராவார் மற்றும் இவரோடு ஒரு குடும்பத் —04 ஆம் பக்கம் பார்க்க

**முரசொலி**

பக்கங்கள் நான்கு — விலை ரூபா: 5-00

முரசு 06 ஒலி 253 ஆங்கிரச ஆடி 31 (15.08.1992) சனி

## கொழும்பில் துப்பாக்கி நபர்கள் 5 லட்சம் ரூபா கொள்ளை

ரத்மலானை ரயில் நிலைய ஊழியர்களுக்கு வங்கியிலிருந்து கொண்டு செல்லப்பட்ட 5 லட்சம் ரூபா பணம் நேற்று கொழும்பில் கொள்ளையடிக்கப்பட்டது. தன்னியக்க துப்பாக்கி ஏந்திய ஒருவர் உட்பட ஐவர் கொண்ட ஒர் கும்பல் பணம் எடுத்துச் செல்லப்பட்ட வான் மீது திடீரென துப்பாக்கிச் சூடு நடத்தியது இதனால் பணம் எடுத்துவந்த இரு ரயில்வே ஊழியர்கள் பலியாகினர் 6 பேர் காயமடைந்தனர். இதன் பின்னர் துப்பாக்கி நபர்கள் ரயில்வே ஊழியர்களை வெளியே இழுத்துப் போட்டுவிட்டு 5 லட்சம் ரூபா பணத்துடன் மேற்படி வானிலேயே தலைமறைவாகி விட்டனர்.

# புதிய ராணுவ தளபதிகள் நியமனம் அரசபோர் தீவிரத்தைக் காட்டுகிறது

## சமாதான வாய்ப்புக் குறைகிறது என்கிறார் பி. பி. ஸி. செய்தியாளர்

அண்மையில் வடக்கில் கண்ணி வெடியில் பலியான ராணுவ அதிகாரிகளுக்குப் பதிலாக அரசு கடும்போக்கான இரு ராணுவ அதிகாரிகளை வடக்கிலும் கிழக்கிலும் நியமித்துள்ளமை அரசு இன்னமும் புலிகளுக்கு எதிரான போரில் தீவிரமாக இருப்பதையே காட்டுகிறது இவ்வாறு பி. பி, ஸி. செய்தியாளர்களில் ஒருவரான லூசியன் ராஜகருண நாயக்கா சுட்டிக் காட்டியுள்ளார்

வடக்கின் புதிய இராணுவ தளபதியாக 52 வயதான ரோயன் வுத்தோவிக்கரான மேஜர் ஜெனரல் ஜெரிசில்வா நியமிக்கப்பட்டுள்ளார் இவர் இராணுவ சேவையில் 32வருட சேவை உடையவர் 1985 முதல் புலிகளுக்கு எதிரான போரில் பங்குபற்றிவருகிறார் ஓப்ரேசன் லிபரேஷன் நடவடிக்கையிலும் பங்கு பற்றியவர்.

கிழக்கின் புதிய தளபதியாக நியமிக்கப்பட்டவர் லக்கி அல்கம இவர் ஜே வி. பி கிளர்ச்சி காலத்தில் ஈவு இரக்கமின்றி நடவடிக்கைகளை மேற்கொண்டமை இன்னமும் ...4 ஆம் பக்கம் பார்க்க

## புலிகளுடன் பேச இந்திய தூதுவர் முயற்சிக்கவில்லை

விடுதலைப் புலிகளை பேச்சுக்கு அழைக்கும் எந்த முயற்சியிலும் தாம் ஈடுபடவில்லை என இந்திய தூதுவர் ஜா தெரிவித்துள்ளார்

இது குறித்து மத்திய அரசே முடிவு எடுக்க முடியும் எனவும் அவர் கொழும்பு பத்திரிகை ஒன்றிற்கு தெரிவித்துள்ளார்

● மயிலந்தனை படுகொலைகள்

## ராணுவம் சம்பந்தப்பட்டிருந்தால் நடவடிக்கை எடுக்கப்படுமாம்

கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு மயிலந்தனையில் தமிழ் பொதுமக்கள் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து பொலிஸ் மட்ட விசாரணை நடத்தப்படுவதாக கூட்டுப்படைத் தலைமையக பேச்சாளர் செனவி ... 4 ஆம் பக்கம் பார்க்க

# அதிகாரிகளின் இழப்பு போரில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தும்

## இருபெண்கள் காயம்

நேற்றுக்காலை பலாலி இராணுவமுகாமிலிருந்து ஏழாலை நோக்கி படையினர் நடத்திய ஷெல் தாக்குதலில் பெண் ஒருவர் காயமடைந்தார் தெல்லிப்பழை பகுதியிலிருந்து படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டிலும் பெண் ஒருவர் காயமடைந்தார்

## ★ முன்னாள் விமானப்படைத் தளபதி

வடக்கின் இராணுவ ஆணைப்பீடம் புலிகளின் கண்ணிவெடி மூலம் அழிக்கப்பட்டது வடக்கில் உடனடி இராணுவ நடவடிக்கை அனைத்தையும் பின்னடையச் செய்துள்ளது; இது பிரிவினைப் போரில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தலாம் என முன்னாள் விமானப்படைத்தளபதி ஹரி குணவர்த்தனா தெரிவித்துள்ளார்,

இராணுவ உயர் அதிகாரிகளின் இழப்பு நிச்சயம் போரில் ஈடுபட்டுள்ள சாதாரண இராணுவசிப்பாய்களை பாதிக்கும் படையினரில் உளத்திடனும் பாதிக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்,

புதிய இராணுவ தலைமையுடன் அரசியல் நடவடிக்கைகளையும் அரசு உடனடியாக ஆரம்பித்தல் வேண்டும் என அண்மையில் இவர் வேண்டுகோள் விடுத்ததும் குறிப்பிடத்தக்கது.

## கொப்பேகுடும்பம் மீது கல் வீச்சு

கனத்தையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கல் வீச்சின் போது ஜெனரல் கொப்பேகடுவவின் குடும்பத்தினர் மீதும் சில கற்கள் வீழ்ந்தன 47

வனத்தை வளர்த்து வனப்பைப் பெருக்கு

## ஐலண்ட் செய்திகளுக்கு அமைச்சர் ரணில் மறுப்பு

கண்ணிவெடியில் பலியான இராணுவ அதிகாரிகளுக்கு முழு இராணுவ மரியாதை அளிக்கப்பட்டதால் தேசிய துக்கதினம் அனுஷ்டிக்கப்படவில்லை. - ரணில் கூறுகிறார் என நேற்றைய தினத்தின ஐலண்ட் பத்திரிகைகள் வெளியிட்ட செய்திகளுக்கு அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மறுப்பு தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இராணுவ சட்டதிட்டத்திற்கு அமைய மரணச்சடங்கு நடத்தப்பட்டதாகவும் அவர்களுக்கு ஆகக் கூடிய இராணுவ மரியாதை வழங்கப்பட்டது என்றே தாம் கூறியதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய துக்கதினம் அனுஷ்டிக்காததினால் மக்கள் ஆத்திரமடைந்தனரா என செய்தியாளர் மாநாட்டில் வெளிநாட்டு செய்தியாளர் ஒருவர் கேட்டதாக ஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. எனினும் எந்த வெளிநாட்டு நிருபரும் அப்படியான கேள்வி கேட்கவில்லை என்றும் அமைச்சர் மறுத்துள்ளார்.

● பல கட்சிகள் கண்டனம்

# கருணாநிதி மீதான விசாரணை

## ஒரு பழிவாங்கும் செயலே!

தமிழக முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதி மீதும், அவரது குடும்பத்தினர் மீதும் ஊழல் விசாரணையை மேற்கொள்ள தமிழக அரசு எடுத்துள்ள முடிவை தமிழகத்தில் பல அரசியல் கட்சிகள் கண்டித்துள்ளன.

கருணாநிதிக்கு எதிராக விசாரணை மேற்கொள்ள தமிழக அரசு எடுத்துள்ள இந்த முடிவை "அரசியல் வஞ்சம் தீர்க்கும் ஒரு நடவடிக்கை" என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழகப் பிரிவு கண்டித்துள்ளது.

தமிழ்நாடு அரசு அரசியல் பழிவாங்கும் போக்கைக் கைவிட்டு தமிழகத்தில் நாகரீகமான அரசியல் நடத்துவதற்கு வழிவகை காணவேண்டுமெனவும் அக் கட்சி கூறியுள்ளது.

முதலமைச்சர் ஜெயலலிதா மீதும் அவரது அமைச்சர்கள் மீதும் பகிரங்கமாக ஊழல் குற்றச்சாட்டு கூறப்பட்டுள்ளது. அத்துடன் தமிழகத்தில் மாணவர் போராட்டம், அரச கல்லூரி ஆசிரியர் வேலை நிறுத்தம் ஆகியன இடம்பெற்று வருகின்றன. இச் சூழ்நிலையில் விசாரணை கமிஷனை அமைத்திருப்பது ஒரு திசை திருப்பும் செயலே என மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கண்டித்துள்ளது.

முதலமைச்சர் அங்கம் வகிக்கும் ஓர் நிறுவனம் அரசுக்கு சொந்தமான ஒரு நிலத்தை வாங்கி ஊழல் புரிந்திருப்பது குறித்து திருப்திகரமான பதிலை இதுவரை தமிழக மக்களுக்கு அறிவிக்காத முதல்வர் இந்த விசாரணைக் கமிஷனை நியமித்திருப்பதில் ஒரு உள்நோக்கம் இருப்பதாகவே தோன்றுகிறது எனவும் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கண்டித்துள்ளது.

கருணாநிதி மீதான ஊழல் குற்றச் சாட்டு விசாரணை அறிவிப்பை தமிழக ஜனதாதள் கட்சியின் தலைவர் சிவாஜி கணேசன் கண்டித்துள்ளார்.

சி பி எம் கட்சியும் தமிழக அரசின் இச் செயலைக் கண்டித்துள்ளது.

### முதலமைச்சர் பதவியிலிருந்து பங்காரப்பாவை நீக்க கோரிக்கை

கர்நாடக முதலமைச்சர் பதவியிலிருந்து பங்காரப்பாவை நீக்கிவிடுமாறு கர்நாடக காங்கிரஸ் ஐ அரசில் அங்கம் வகிக்கும் பல எம். எல். ஏக்கள் காங்கிரஸ் தலைமைப் பீடத்தைக் கோரியுள்ளனர்.

நேற்று முன்தினம் இவர்கள் காங்கிரஸ் ஐ. பொதுச் செயலர் சர்மாவை புதுடில்லியில் நேரில் சந்தித்து இக் கோரிக்கையை விடுத்தனர்.

பங்காரப்பா மீதான குற்றச்சாட்டுக்கள் அடங்கிய மகஜர் ஒன்றையும் அவர்கள் சர்மாவிடம் சமர்ப்பித்தனர்.

கட்சித் தலைவர் நரசிம்மராவைக் கலந்தாலோசித்து விட்டு இது குறித்த இறுதி முடிவு தெரிவிக்கப்படுமென பொதுச் செயலர் சர்மா தூதுக்குழுவிடம் தெரிவித்தார்.

கர்நாடகத்தில் தமிழர்கள் மீதான தாக்குதலுக்கு பங்காரப்பாவே காரணமெனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

---

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ். கிளை தலைமையகம்

## அதிர்ஷ்ட இலாபச் சீட்டு

இலங்கை செஞ்சிலுவைச் சங்க, யாழ். கிளையின் பிரிவுகளில் விற்பனை செய்யப்படுகின்ற அதிர்ஷ்ட இலாபச் சீட்டின் குலுக்கல் திகதி 15 - 08 - 92 ஆம் திகதியிலிருந்து 30-09-92 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

நன்றி

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்,
13 - 08 - 92

ஏ சி செபநாயகம்
தலைவர் (இடைக்காலம்)

08025

---

![University seal]

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 1992 - 09 - 18 ஆம் திகதிவரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

பதவிகள்:

1. தற்காலிக உதவி விரிவுரையாளர்

இந்து நாகரிகம்
நாடகமும் அரங்குக் கலைகளும்
நுண்கலை
பொருளியல்
அரசறிவியல்
மெய்யியல்
இந்து நாகரிகம்
புவியியல்
தமிழ்
ஆங்கிலம்
தொழில் நிர்வாகம்
வர்த்தகம்
சித்தமருத்துவம்
ஆற்றுகைக்கலை- கர்நாடக சங்கீதம்/ வாய்ப்பாட்டு
ஆற்றுகைக் கலை- கர்நாடக சங்கீதம்/ வாத்தியங்கள்
ஆற்றுகைக்கலை- நடனம்/ பரதநாட்டியம்

2. தற்காலிககட்டுரைஆசிரியர்

புவியியல்
வரலாறு

3. தற்காலிக போதனாசிரியர்

ஆங்கிலம்- தரம் II
பரதநாட்டியம்
கர்நாடக வாய்ப்பாட்டு
மிருதங்கம்
வயலின்
வீணை

4. இடைவரவு விரிவுரையாளர்

வர்த்தக, கைத்தொழிற் சட்டம்
சட்டச் சூழல்
கணக்கியல்
கணக்காய்வு
வரி விதிப்பு
வங்கியியல்
இரேக்க, மத்தியகால மெய்யியல்
தற்கால மேற்கத்திய மெய்யியல்
பௌத்த உளவியல்
சமய மெய்யியல்
பழைய ஏற்பாட்டியல்
புதிய ஏற்பாட்டியல்
கிறிஸ்தவ மெய்யியல்
திருச்சபை வரலாறு
கிறிஸ்தவ வழிபாட்டியல்
தமிழ் (சித்தமருத்துவம் பற்றிய அறிவுடன்)
மீன்பிடிப் புவியியல்
பிரான்சிய மொழி
நாடகமும் அரங்குக் கலைகளும்- (வேடப்புனைவு, நடிப்புக்கொள்கைகள், ஒளி, மரபுவழி நாடகம்)

5. இடைவரவு போதனாசிரியர்

பாரம் பரிய கைவினைகள்
நவீன ஓவியம் தீட்டுதல் / கட்டிடக் கலை

6. தற்காலிக செய்முறை காட்டுநர்

சித்த மருத்துவம்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவிப்பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும் விபரங்களையும் பெற விரும்புபவர்கள் 23×10 சதம மீற்றர் அளவுடைய சுய முகவரியிட்டு 2/= முத்திரையொட்டப் பெற்ற தபால் உறையை அனுப்புதல் வேண்டும்.

விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந் நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி
1992 08.12

08022

---

### யூ.என்.எச்.சி.ஆர் பிரதிநிதி அனுதாபம்

மரணமடைந்த லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ யுத்தத்தில் பொது மக்கள் பாதிக்கப்படுவதை அறிந்திருந்ததாகவும் அகதிகளுக்கான ஐ. நா அமைப்பிற்கு பலவிதத்திலும் ஒத்துழைப்பு வழங்கியவர் என்றும் யூ. என் எச் சீ ஆரின் இலங்கைப் பிரதிநிதி அனுதாபக்கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாக புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

### முனீஸ்வரம் கொடியேற்றம்

சிலாபம் முனீஸ்வரம் ஆலய கொடியேற்றம் இன்று சனிக்கிழமை இடம்பெறுகிறது.

செப்டம்பர் 6 ஆம் திகதி மாலை 6 மணிக்கு தீ மிதிப்பு உற்சவம் இடம்பெறும்.

### கருத்தரங்கும் கலந்துரையாடலும்

"தமிழீழ விடுதலையை வென்றெடுப்பதில் கலை, இலக்கிய வாதிகளின் பங்கும், பணியும்" என்னும் பொருள் பற்றிய கருத்தரங்கு கோண்டாவில் விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழக நடுவப் பணியகத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்) திரு. சோ. பத்மநாதன், திரு. ஆ யேசுராசா ஆகியோர் கருத்தரங்கில் உரையாற்றுவர்.

### செந்தாமரை மரணமானார்

தென்னிந்திய திரைப்பட நடிகர் செந்தாமரை நேற்றுக் காலை சென்னையில் காலமானார் அவருக்கு வயது 57.

600 க்கும் மேற்பட்ட தமிழ், தெலுங்கு மற்றும் மலையாளப் படங்களில் அவர் நடித்துள்ளார்.

தொலைக்காட்சி தொடர் நாடகங்கள் பலவற்றிலும் செந்தாமரை நடித்துள்ளார்.

### ஊனமுற்றோர்க்கு நிதி உதவி

கிளிநொச்சி மாவட்ட ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்திற்கு நெதர்லண்ட்ஸ் என எவ் எவ் நிதியத்தில் இருந்து 2000 ஸ்ரேலிங்பவுண் உதவி கிடைத்துள்ளது. அம் மாவட்டத்தில் உள்ள எட்டு ஊனமுற்றோர்களிற்கு புனர்வாழ்வு அளிப்பதற்காக இந் நிதியயன்படுத்தப்படவுள்ளது.

இத் தொகை இலங்கை ரூபாவில் சுமார் 80,000 ரூபா ஆகும்.

(55)

---

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்
யாழ். கிளை தலைமையகம்

### விசேட பொதுக் கூட்டத்துக்கான அறிவித்தல்

யாழ் கிளையின் மேற்படி விசேட பொதுக் கூட்டம் புதிய செயற்குழு உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக எதிர்வரும் 13 09 92 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 30 மணிக்கு யாழ் ரியோலாஸ் கல்லூரி யூபிலி மண்டபத்தில் நடைபெறும்.

யாழ் கிளை செயற்குழு உறுப்பினர்கள்பதவிக்கான நியமனங்கள் 02 09 92 முதல் 04 09 92 பிற்பகல் 4 00 மணிவரை எமது பணிமனையில் ஏற்றுக்கொள்ளப்படும். இதற்கான படிவங்களை எமது பணிமனையில் ரூபா 10/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

நியமனப் பத்திரங்களை 06 09 92 பிற்பகல் 4 00 மணிவரை வரையில் பெற்றுக்கொள்ளலாம்.

### பிரிவு வருடாந்தப் பொதுக் கூட்டம்

யாழ் கிளையின் ஒவ்வொரு பிரிவிலும் 30.08 92 ஆம் திகதி வருடாந்தப் பொதுக் கூட்டம் பின்னர் பத்திரிகைகளில் அறிவிக்கப்படும் இடங்களில் நடைபெறும். பிரிவுகளின் நியமனம் 19. 08 92 முதல் 21 08 92 பிற்பகல் 4. 00 மணிவரை அவ்வப் பிரிவுகளில் பணிமனையில் ஏற்றுக்கொள்ளப்படும் பிரிவுகளின் நியமனம் வாபஸ் 23 08.92 பிற்பகல் 4 00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும் பிரிவுக்கான நியமனப் பத்திரங்களை ரூபா 10/- செலுத்தி அவ்வப் பிரிவு பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.

ஒவ்வொரு பிரிவிலும் 30 08 92ல் நடைபெறும் வருடாந்த பொதுக் கூட்டத்தில் தெரிவு செய்யப்படும் பிரிவு செயற்குழு உறுப்பினர் பட்டியலும், ஒவ்வொரு பிரிவிலும் தெரிவு செய்யப்படும் 30 கிளைக்குழு பிரதிநிதிகளின் முழுப்பெயர், அங்கத்தவ அட்டை இலக்கம் தேசிய அடையாள அட்டை இலக்கம், அடங்கிய பட்டியலை பிரிவில் தெரிவு செய்யப்படும் புதிய தலைவரின் சிபார்சுடன் புதிய பிரிவு செயலாளர் யாழ் கிளை இடைக்கால தலைவருக்கு 01 09 92 பிற்பகல் 4 00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

#### முக்கிய குறிப்பு:

மேற்படி யாழ்கிளை, பிரிவுகளின் தேர்தல் சம்பந்தமான விடயங்கள் பற்றி விளக்கம் கொடுப்பதற்காக யாழ்கிளையின் ஒவ்வொரு பிரிவின் தற்போதைய தலைவர், செயலாளர், உபதலைவர் பொருளாளர் அனைவரையும் தவறாது எமது பணிமனையில் இன்று 15-08 92 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10. 00 மணிக்கு நடைபெறும் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
13-08-92

ஏ. சி. செபநாயகம்
தலைவர்
(இடைக்கால நிர்வாகம்)

# நல்லூர் கந்தசுவாமி கோயில் மகோற்சவம் 1992

## ஞான சக்தி தரன்

சிவபெருமானுடன் அபேதமாக விளங்கும் தடைப்படாத அறிவே ஞானசக்தி எனப்படும். அந்தப் பராசக்தி ஒன்றே ஆன்மாக்களின் மீது வைத்த பெருங்கருணை நிமித்தமே மூவகைப்படும். அந்த மூன்று சக்திகளையும் உடையவர் என்பதை விளக்குவதற்கே பெருமான் வள்ளியம்மையார், தெய்வானையம்மையார், வேலாயுதம் என்னும் மூன்றனையும் கொண்டருளினார். இச்சா சத்தியையே வள்ளியம்மையார் என்றும், கிரியா சத்தியையே தெய்வயானையம்மையார் என்றும், ஞானசத்தியையே வேலாயுதமென்றும் உருவகித்துப் புராணம் தி சுத்த வித்தைகள் புலனாகும். வேற்படைக்கலம் ஞானசத்தி என்பது, "எம்முடைய சத்தியே நும்மைக் கொல்லும்" என்று சிவபெருமான் சூரபன்மன் ஆதியோர்க்குச் சொன்னமையாலும், அவ்வாறே ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும்மலம் என்றெண்ணப்பட்ட சூரபன்மன், சிங்கமுகன், தாரகன் என்னும் மூவரையும், ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தம் எனும் வினைப் பகுதி என்றெண்ணத்தகுந்த இரவுஞ்சமலையையும் அதன் கொடுமைகளையும் அழித்தமையாலும்; மற்றைய யுதங்கட்கும் வழங்கப்படாத சத்தி என்னும் சிறப்புப் பெயரைத் தனக்கே உடைமையாலும் மும்மலகாரியத் தொகுதிகள் என்றெண்ணப்படும் சூராதி மூவரது சேனைகளையும் மாயங்களையும் அழித்தமையாலும், கந்தபுராணத்திற்கூறியபடி தோமரம், தண்டம், குலிசம், அங்குசம், அம்பு, பங்கயம், மணி, மழு, தண்டு, வாள், வில் என்னும் பதினொரு ஆயுதங்களும் பதினொரு உருத்திரர்களே என்றும், வேலாயுதம் சிவசத்தியே அவ்வுருவாக வந்திருந்ததென்றும் கந்தபுராணம் உரைத்தலானும் மற்றைய ஆயுதங்கள் போலச் சடத்துவமின்றிச் சித்துருவமுடைமையானும் (சடத்துவம் - அறிவற்ற பொருள், சித்துவம் - அறிவுடைப் பொருள்) பிறவற்றானும் தெற்றெனத் தெளியப்படும்.

இன்னும் பராசத்தியோடு அபேதமென்பவாக (அபேதம் - பேதம் அற்றது) அது பரம்பரனேயென்றும் கருதப்படுதல் போன்ற இவ்வேற்படைக்கலமும் கந்தசாமியே என்று கூறப்படுகின்றது.

### கந்தபுராணம்

அந்தமி லொளியின் சீரால் அறுமுகம் படைத்த பண்பால்
எந்தையை நின்றும் வந்த இயற்கையாற் சத்தியாம் பேர்
தந்திடும் உணுவல் பெற்ற தன்மையாற் றனிவேற் பெம்மான்
கந்தனே என்ன நின்னைக் கண்டனக் கவலை தீர்ந்தோம்

(ஆதாரம்: 'சுப்பிரமணிய பராக்கிரமம் தென்புலோலியூர் சதாவதானம் மகாவித்துவான் நா கதிரைவேற்பிள்ளை)

# இன்றைய தெய்வீக இசையரங்கு

## சிறிமுருகன் தண்ணீர்ப் பந்தல்

மாலை 6.00 - இரவு 8.00

பாட்டு — வயலின் — மிருதங்கம்

V. சிவஞானசேகரம் V K குமாரசாமி S, மகேந்திரன்

# எழுது வினைஞர் தெரிவுக்கான விண்ணப்ப திகதி நீடிப்பு

அரச, மாகாண, கூட்டுத்தாபன சேவைகளுக்கு எழுதுவினைஞர்களையும் மற்றும் உத்தியோகத்தர்களையும் சேர்ப்பதற்கான விண்ணப்ப திகதி ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக பொது நிருவாக மாகாணசபைகள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

யாழ் மாவட்டத்தில் இம்மாதம் 14 ஆம் திகதியும், ஏனைய மாவட்டங்களில் இம்மாதம் 7 ஆம் திகதியும் இதற்கான விண்ணப்ப முடிவு திகதி என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

# குழியைத் தவிர்க்க முற்பட்டபோதே கண்ணிவெடி வெடித்தது

அராலியில் வீதியிலிருந்த குழியொன்றைத் தவிர்க்க முற்பட்டபோதே படை அதிகாரிகள் சென்ற வாகனம் கண்ணிவெடியில் சிக்கியது என கூட்டுப்படைத் தலைமையகப் பேச்சாளர் கேணல் சரத் முனசிங்க கொழும்பில் தெரிவித்துள்ளார்.

லெப் கேணல் உள்ளிட்ட படை உயரதிகாரிகள் பயணம் செய்த ஜீப் வண்டியை சம்பவதினம் மேஜர் ஜெனரல் விஜய விமலரத்னாவே ஓட்டிச் சென்றார்.

சம்பவம் இடம்பெற்ற இடத்தில் வீதியில் காணப்பட்ட குழியொன்றைத் தவிர்ப்பதற்காக விஜய விமலரத்ன வாகனத்தை வீதியின் ஓரத்திற்குத் திருப்பிய போதே அங்கு புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடி வெடித்ததெனவும் சரத் முனசிங்க தெரிவித்தார்.

★ அதிக தற்கொலைகள் எங்கு நிகழ்கிறது?

# உலகில் இலங்கை 2 ஆம் இடத்தில்!

## மாவட்டங்களில் முதலிடம்வவுனியாவுக்கு!!

உலகில் அதிகமானோர் தற்கொலை செய்துகொள்ளும் நாடுகளின் பட்டியலில் இரண்டாமிடத்தை இலங்கை தற்பொழுது பிடித்துள்ளது.

உலக நாடுகளில் வருடா வருடம் இடம்பெறும் தற்கொலைகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு சஞ்சிகையொன்று இப்பட்டியலைத் தயாரித்துள்ளது.

இதைவிட எமக்கு அதிர்ச்சி தரக்கூடிய மற்றொரு தகவலையும் அந்த சஞ்சிகை வெளியிட்டுள்ளது.

உலகில் தற்கொலைகளில் இரண்டாமிடத்தைப் பெறுவது இலங்கை- அந்த இலங்கையில் அதிக தற்கொலைகள் இடம்பெறும் மாவட்டம் எது தெரியுமா?

வடமாகாணத்தின் எல்லைப்புறத்தில் அமைந்துள்ள வவுனியா மாவட்டம் தான் அது எனத் தரவுகளை ஆதாரம் காட்டித் தெரிவிக்கிறது அச் சஞ்சிகை.

# ஞாயிறு தினங்களில் கடமைபுரிய அனுமதிக்குமாறு கோரிக்கை!

அரசாங்க மருந்தக்கலவையாளர்கள் சங்க யாழ் பிரதேசக் கிளையின் செயற்குழுக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ் நகரில் நடைபெற்றது.

வருடாந்த பொதுக் கூட்டத்தை அடுத்த மாதம் 27 ஆம் திகதியன்று நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

பிரசவ விடுதியுடன் இணைந்துள்ள மருந்தகங்களில் ஞாயிறு தினங்களில் மருந்தக் கலவையாளர்கள் கடமையாற்றுவதற்கு மீண்டும் அனுமதிக்கப்படவேண்டும் என்று யாழ் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளரை கேட்டுக் கொள்ளும் தீர்மானமும், வினைத்திறமைகாண் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு ஒழுங்கு செய்து தருமாறு கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

# களத்தைக் கலவரங்களுக்கு சுதந்திரக்கட்சியே பின்னணியில்

## -அமைச்சர் ரணில்

டென்சில் கொப்பேகடுவ, விஜய விமலரத்ன ஆகிய படை உயர் அதிகாரிகளின் இறுதிக் கிரியைகளின்போது குழப்பம் விளைவித்தவர்களுக்குப் பின்னால் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி செயற்பட்டுள்ளது என அமைச்சரவைப் பேச்சாளரான கைத்தொழில் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை இவர்களின் இறுதிக் கிரியைகளின்போது மயானத்திற்கு அரசியலைக் கொண்டு வந்து குழப்பம் செய்த குழுவினரை வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சிறிசேன கூரே கண்டித்துள்ளார்.

நல்லொழுக்கமுள்ள எவரும் ஒரு மரண வீட்டில் கற்களை வீசி, கூச்சல்போட்டு பரிகாசம் செய்து குழப்பம் செய்யமாட்டார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தானில் பெருமழை! 170 பேர் இதுவரை மரணம்!!

பாகிஸ்தான் சிந்து மாகாணத்தில் பெருமழை பெய்து வருகிறது.

இதனால் 170 பேர் மரணமாகினர்.

பெரும் பயிர், உடைமைச் சேதமும் ஏற்பட்டுள்ளன.

# எழுதுவினைஞர் பதவிக்கு 5200 விண்ணப்பங்கள்

யாழ். மாவட்டத்தில் இருந்து எழுதுவினைஞர் சேவை போட்டிப்பரீட்சைக்கு சுமார் 5200 பேர் யாழ் செயலகத்துக்கு விண்ணப்பித்துள்ளதாக செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவ் விண்ணப்பங்கள் கடந்த புதன் திருகோணமலை துறைமுகத்துக்குச் சென்ற குமண கப்பலில் அனுப்பி வைக்கப்பட்டதாகவும் அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார். 47

# பஸ் உதிரிப் பாகங்களுக்கு வரி விலக்களிக்கக் கோரிக்கை

குறைந்த விலையில் உதிரிப் பாகங்களை பஸ் உரிமையாளர்கள் பெற்றுக்கொள்ள உதவுமாறு தனியார் தென் பிராந்திய போக்குவரத்துச் சங்கம் அரசைக் கேட்டுள்ளது.

இதன் பொருட்டு தனியார் பஸ் சங்கங்கள் உதிரிப் பாகங்களை நேரடியாகவே இறக்குமதி செய்யவும், அவற்றுக்கு இறக்குமதித் தீர்வையிலிருந்து விலக்களிக்கவும் அனுமதி வழங்குமாறும் இச் சங்கம் அரசைக் கோரியுள்ளது.

# புதையல் தேடி அகழ்வு நடத்திய 24 பேர் பொலிஸ் காவலில!

தென்பகுதியில் சில கிராமங்களில் புதையல் தேடி அகழ்வு நடத்தும் பழக்கம் இன்னமும் தொடர்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சில தினங்களுக்கு முன்னர் அனுராதபுரம் என்னுமிடத்திலும் இத்தகைய அகழ்வு வேலையொன்று யாத்திரிகர்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டது.

இந்த அகழ்வை நடத்திய 24 பேர் தற்பொழுது பொலிஸாரின் விருந்தாளிகளாகத் தங்கியுள்ளனர்.

# லிபியாவுக்கு எதிரான ஐ. நா. தடை நீடிப்பு!

லிபியாவுக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள இராணுவ பாதுகாப்புத் தடை, மற்றும் விமான போக்குவரத்துத் தடை ஆகியவற்றைத் தொடர்ந்தும் அமுல் செய்வதென ஐ.நா. பாதுகாப்புச் சபை புதன்று தீர்மானித்துள்ளது.

லிபியா விமானக் குண்டு வெடிப்பில் சம்பந்தப்பட்டதாக குற்றஞ்சாட்டப்படும் தனது உளவாளிகளை அமெரிக்காவிடமோ பிரிட்டனிடமோ ஒப்படைக்கும் வரை இத்தடை நீடிக்குமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

# நொச்சிமோட்டைத் தாக்குதலில் புளொட் உறுப்பினர் பலி

வவுனியா நொச்சிமோட்டைப் பாலத்திற்கருகில் நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் புளொட் உறுப்பினர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக கொழும்புச் செய்தியொன்று தெரிவிக்கிறது.

இச்சம்பவத்தில் புளொட் உறுப்பினர் ஒருவர் பலியானதாகவும், இருவர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்படுகிறது.

## அரை இறுதி ஆட்டத்திற்கு தெரிவு

யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்பட்டுவரும் 40 வயதிற்கு மேற்பட்டவர்கள் கலந்துகொள்ளும் உதைபந்தாட்டப் போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி அரை இறுதி ஆட்டத்தில் ஆடத் தகுதி பெற்றுள்ளது.

இப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் அரியாலை கால்பிள்ளை விளையாட்டரங்கில் இடம்பெற்ற ஆட்டத்தில் பாஷையூர் சென் அந்தனீஸ் விளையாட்டுக் கழக அணியை அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற கோல்கள் கணக்கில் தோற்கடித்தது.

13 வயதிற்கு உட்பட்டவர்கள் போட்டியில் நாவாந்துறை சென் மேரீஸ் விளையாட்டுக் கழக அணி தன்னை எதிர்த்தாடிய குருநகர் சென்றோக் விளையாட்டுக் கழக அணியை 5:0 என்ற கோல்கள் கணக்கில் வென்றது. 16

## குளம் புனரமைப்பு

தென்புலோலியிலுள்ள கொட்டுக் கேணிக்குளம் பேராற் நிறுவனத்தின் அனுசரணையுடன் அப்பகுதி இளைஞர்கள், முதியோர்களால் ஆழமாக்கப்பட்டுப் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

# பயிலுநர் ஆசிரியர் மாதாந்தப்படி 1500 ரூபாவாக அதிகரிப்பு

1990 ஆம் ஆண்டின் முற்பகுதியில் சேவையில் சேர்க்கப்பட்ட பயிலுநர் ஆசிரியர்களின் மாதாந்தப்படி இவ்வாண்டு ஜனவரி மாதம் முதல் 1500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஏனைய அரச ஊழியர்களுக்கான 100ரூபா படியை இந்த 35ஆயிரம் பயிலுநர் ஆசிரியர்களும் பெறுவர் எனவும் இவர்கள் ஜனவரி முதல் நிலுவையுடன் இந்த 100 ரூபா படியை பெறுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதற்கென இறைசேரி 4 கோடி 20 லட்சம் ரூபாவை கல்வி அமைச்சுக்கு வழங்கியுள்ளது.

# மட்டு. கல்விப்பணிப்பாளர் பதவி வெற்றிடம்

மட்டக்களப்பு மாவட்ட கல்விப் பணிப்பாளர் பதவிக்கு அடுத்த மாதம் 1 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு 1 அல்லது 2 ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றதாக வடக்கு கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சு செயலாளர் தெரிவித்துள்ளார். 47

## ● எழுதுவினைஞர் சேவைகள்

# நியமனம் பெறத் தவறியோர் அரச அதிபருக்கு மகஜர்

எழுதுவினைஞர் பரீட்சையில் சித்தியடைந்து இதுவரை நியமனம் கிடைக்காத பரீட்சார்த்திகள் அரச அதிபருக்கு மகஜர் ஒன்றினைச் சமர்ப்பித்துள்ளனர்.

தாங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக விளம்பரப் பலகையிலும், பத்திரிகைகள் வாயிலாகவும் அறிவிக்கப்பட்டிருந்தும் இதுவரை நியமனம் வழங்கப்படாததற்கான காரணத்தை அம் மகஜரில் கேட்டுள்ளனர்.

மேற்படி பரீட்சை மூலம் 304 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக விளம்பரப் பலகையில் குறிப்பிடப்பட்டிருந்தும் 155 பேருக்கே நியமனம் வழங்கப்பட்டதாகவும் தெரிவு செய்யப்பட்ட எஞ்சியோருக்கும் நியமனம் வழங்கும் வண்ணம் அந்த மகஜரில் கோரப்பட்டுள்ளது.

## கனத்தைக்கலவரம்!

# 10 சிங்கள இளைஞர்கள் கைது

கடந்த புதன் கிழமை கனத்தையில் மேஜர் ஜெனரல் விஜய விமலரத்னாவின் இறுதிச் சடங்கின் போது கலவரத்தில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் 10 சிங்கள இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் இது தொடர்பாக மேலும் சிலர் தேடப்பட்டு வருகிறார்கள்.

இது இவ்வாறிருக்க இச் சம்பவத்தில் காயமடைந்த கொழும்பு மேயர் ரத்ன சிறி ராஜபக்ஷவிடமிருந்து இச் சம்பவம் பற்றி பொலிஸார் வாக்குமூலம் ஒன்றைப் பெற்றுள்ளனர்.

## சமகால போராட்ட

# சிறுகதைத் தொகுதி வெளிவரும்

சமகாலப் போராட்ட இலக்கியங்களுக்கு களமமைத்துக் கொடுக்கும் முகமாகவும், புதிய எழுத்தாளர்களை உருவாக்கும் முகமாகவும் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தில் வடமராட்சி கோட்டத்தினர் சிறுகதைத்தொகுதி ஒன்றினை வெளியிட முடிவு செய்துள்ளனர்.

இச்சிறுகதைத் தொகுதிக்கான ஆக்கங்கள் வடமராட்சியிலுள்ள சிறுகதை எழுத்தாளர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது.

சமகால நிகழ்வுகளை கருப்பொருளாகக் கொண்டு எழுதப்படும் சிறுகதைகளை இம் மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் பொறுப்பாளர் விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக்கழகம், வடமராட்சி வதிரி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது

## ★ பல்கலைக்கழக பயிற்சிநெறி

# விண்ணப்ப திகதியை நீடிக்க அரச அதிபர் கோரிக்கை

மொறட்டுவ பல்கலைக்கழகம் டிப்ளோமா பொறியியலாளருக்கான பயிற்சிநெறிகளை ஆரம்பிப்பதற்கான விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்களை கோரியுள்ளது

இப்பயிற்சிநெறிக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி 14. 8 92 ஆகும்

ஆனால் யாழ்ப்பாணத்துக்கு வர்த்தமானி இன்னும் வந்து சேராததினால் இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்களை கோருவதற்கான இறுதித்திகதியை குறைந்தது இரண்டுவார காலத்துக்கு நீடிக்குமாறு யாழ் அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் நேற்று மொறட்டுவ பல்கலைக்கழக பதிவாளருக்கு அனுப்பிய அவசரசெய்தியில் கேட்டிருப்பதாக யாழ் செயலக வட்டாரம் தெரிவித்தது

## வீரப்பன் தாக்கி

# 5 அதிகாரிகள் பலி

கர்நாடகத்தில் நேற்று சந்தனமரம் கடத்தும் வீரப்பன் குழு மறைந்திருந்து நடத்திய தாக்குதலில் மைசூர் மாவட்ட உயர் பொலிஸ் அதிகாரிகள் ஐவர் தலத்திலேயே கொல்லப்பட்டனர் சம்பவம் இடம் பெற்ற காட்டுப்பகுதிக்கு கர்நாடக பொலிஸ் அதிகாரிகள் குழு ஒன்று விரைந்துள்ளது

## ★ கருணாநிதி சவால்

# முதல்வர் ஜெயலலிதா மீது தி. மு. க. வழக்கு தொடரும்

தமிழக அரசு தம் மீதும் தனது குடும்பத்தினர் மீதும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தி அவற்றை விசாரிப்பதற்காக விசாரணைக் கமிஷனை நியமித்திருப்பது அரசியல் உள் நோக்கம் கொண்டது எனவும், காழ்ப்புணர்ச்சியைக் காட்டக்கூடியது என்றும் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

சென்னையிலுள்ள இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியை தனியாரிடம் ஒப்படைத்தல், மற்றும் சில நடவடிக்கைகளில் முதல்வர் ஜெயலலிதா கோடிக்கணக்கான ரூபா ஊழல் புரிந்துள்ளதாகவும் அவர் பதிலுக்கு குற்றம் சாட்டினார்.

தமிழக ஆளுநரை அணுகி முதல்வர் மீதான இக்குற்றச் சாட்டுக்களையும் விசாரிக்க நீதிமன்றத்தில் வழக்குத் தொடர தி மு க. அனுமதி கோரவுள்ளதாகவும் கலைஞர் தெரிவித்தார்.

தமிழகத்தில் சட்டமொழுங்கு சீர் குலைந்துள்ள இவ்வேளையில் கவனத்தை திசை திருப்பவும் எதிர்க்கட்சிகள் மீது குற்றம் சாட்டவுமே இவ் விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்

## தந்தைசெல்வா மாணவர்க்கு

ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு விண்ணப்பித்த பின்பு தெல்லிப்பழை தந்தை செல்வா தொடக்க நிலைப் பள்ளியை விட்டு இடம் பெயர்ந்து சென்ற மாணவர்களை 22 08 1992 காலை 9 மணிக்கு மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தில் சுட்டிலக்கங்களைப் பெற்றுச் செல்லுமாறு அதிபர் கேட்டுள்ளார்.

## ★ காவிரி நீர்ப் பங்கீட்டு பிரச்சினை

# நடுவர்மன்றதீர்ப்பை எல்லோரும் ஏற்கவேண்டும்-சுக்லா

காவிரிநீர்ப் பங்கீடு தொடர்பாக நியமிக்கப்பட்ட நடுவர் மன்றத் தீர்ப்பை சம்பந்தப்பட்ட சகலரும் ஏற்றுக் கொள்ளவேண்டும் என இந்திய மத்திய நீர்வளத்துறை அமைச்சர் வி சி சுக்லா கூறினார் தமிழகம் வந்திருந்த அமைச்சர் செய்தியாளர் மத்தியில் பேசும் போதே இவ்வாறு கூறினார்.

மேலும் நடுவர் மன்றம் சகலரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வொன்றை வழங்கும் எனவும் நம்பிக்கை தெரிவித்தார்.

தேவைப்பட்டால் காவிரி நீர்ப்பங்கீட்டுப் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட மாநில முதலமைச்சர்களின் கூட்டமொன்றை தாம் கூட்டக் கூடும் என்றும் அமைச்சர் சுக்லா தெரிவித்தார்.

## தீவகத்திலிருந்து...

...யைச் சேர்ந்த திருமதி மகேஸ்வரிக்கரசி பத்திநாதர் 3 வயதுக் குழந்தை பத்திநாதர் கலைவாணி செல்வி தயாளினி இராசரத்தினம் (14) இரத்தினம் சிறீவரதன் (24) ஆகியோருடன் இராசையா இராசகுலசிங்கம் (34) (இரண்டாம் வட்டாரம் வேலணை) செல்வி இராசேஸ்வரி குருசாமி 19 வயது காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம் ஆகியோராவர்

முஸ்லிம் இருஷேக்கள் மண்டைதீவு படையினரால் ஏவப்பட்ட போது ஒட்டுமடம் ஒஸ்மானியா கல்லூரிக்கு அருகில் ஓர் வீட்டில் வீழ்ந்த போதே யுவதி ஒருவர் பலியானார் ஏனையோர் காயப்பட்டனர்

5 நிமிட இடைவெளியின் பின் காரைநகர் கடற்படைத்துறையிலிருந்து படையினரால் மேற்கொள்ளப்பட்ட 4 ஷெல்கள் அடுத்தடுத்து ஒஸ்மானியாவுக்கு அருகிலுள்ள வயல் பரப்புகளில் விழ்ந்து வெடித்தன இந்த ஷெல்களினாலும் மேலும் பலர் சிறுகாயமடைந்தனர்.

3 வீடுகள் இத்தாக்குதலில் சேதமடைந்தன இதனையடுத்து இப்பகுதி மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்,

கரையோரப்பகுதி மக்கள் பாதுகாப்பு வலையம் நோக்கி நள்ளிரவுவரை இடம் பெயர்ந்ததை காணக் கூடியதாக இருந்தது. 07

## மாவட்ட செயலகங்கள்

# படிப்படியாக ஒழிக்கப்படும்

அரசாங்கம் அரச நிர்வாகத்தை பிரதேச மட்டத்துக்கு பரவலாக்கும் நோக்குடன் பகுதிச் செயலாளர்களை நியமிக்க உள்ளதாக அரச நிர்வாகச் சுற்றறிக்கை இல 21/92 ன்படி தெரிவித்துள்ளது.

இதன்படி 31. 12 92 க்கு முன்பாக நாடெங்கிலும் சுமார் 195 பிரதேச சபைகளுக்கும் பகுதிச் செயலாளர்கள் நியமிக்கப்பட உள்ளார்கள். சம்பள அளவுத் திட்டத்தின்படி 72000 — 3 × 600 — 10 × 420 — 108 000 என்ற வேதன அளவுத்திட்டத்தில் உள்ள வகுப்பு 1 ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் பகுதிச் செயலாளராக நியமிக்கப்படுவார் இவருக்கு இந்த மட்டத்துக்கு பன்முகப்படுத்தப்பட்ட பணிகளைக் கையாளும் பதவி நிலை உத்தியோகத்தர்கள் உதவுவர் பகுதியில் அவரது பணியும் நிலையும் மாவட்ட மட்டத்தில் அரசாங்க அதிபருக்குத் தற்போதுள்ள அதே நிலையை ஒத்ததாக இருக்கும்

இத்திட்டத்தின் பேரில் அரசாங்கப் பணிகள் பன்முகப்படுத்தப்படுவதன் மூலம் கச்சேரிகள் செயலற்றுப் போகும் அத்துடன் மாவட்டத்தில் அரசாங்க அதிபர் நிறுவனமும் இவ்வாறு போகும்.

எனினும் மாவட்ட மட்டத்தில் தேர்தல் பணிகளை மேற்கொள்ள தொடர்ந்து மாவட்டக் கூட்டிணைப்புக் குழு இயங்கும்

பகுதிச் செயலாளரின் கீழ் பல புதிய பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட உள்ளதாகவும் இச்சுற்றறிக்கை மேலும் தெரிவிக்கிறது. 16

## புதிய...

சிங்கள மக்களிடையே இலி... கொள்ள வைக்கிறது.

இந்த இரு கடும் போக்கு இராணுவ தளபதிகளும் இராணுவத் தீர்வை ஆதரிப்பவர்கள் எனத் தெரிவிக்கும் பி பி ஸி செய்தியாளர் இந்நியமனங்கள் போருக்கு சமாதான வாய்ப்பு குறைந்து வருகிறது என்பதையே காட்டுவதாக சுட்டிக்காட்டுகிறார்.

## ராணுவம்...

சரத்முனசிங்க தெரிவித்துள்ளார்

இக்கொலைகளில் இராணுவத்தினர் சம்பந்தப்பட்டுள்ளனரா என்பது இதுவரை விசாரணைகளில் இருந்து தெரியவில்லை எனவும், இச் சம்பவத்தில் இராணுவத்தினர் சம்பந்தப்பட்டிருந்தால் சம்பந்தப்பட்ட இராணுவத்தினர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

# தபாலக எழுதுவினைஞர் நேர்முகப்பரீட்சை மீண்டும்

யாழ். மாவட்ட தபால் திணைக்களத்திலுள்ள எழுதுநர் குழுக்கான வெற்றிடங்களை நிரப்ப வடபிராந்திய பிரதி தபால்மா அதிபர் எஸ் எம், சேதுகாவலர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நேற்று யாழ் செயலகத்துக்கு 23 விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட போதிலும் 16 பேரே நேர்முகப்பரீட்சைக்கு வந்ததாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன,

இந்த வெற்றிடங்களுக்கு க பொ. த உயர்தர வகுப்பு சித்தியடைந்தவர்களுக்கே நியமனம் வழங்கவிருப்பதால் மீண்டும் இந்த நேர்முகப்பரீட்சை நடைபெறலாம் என செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. 06, 25

## ஆங்கில வகுப்பு ஆரம்பம்

மல்லாகம் மகா வித்தியாலயத்தில் யாழ் கல்வித்திணைக்கள வளர்ந்தோர் கல்வித் திட்டத்தின் கீழ் இன்று சனிக்கிழமை காலை 9 மணியளவில் கோட்டக் கல்வி அதிபர் திரு. ஆ. கமலநாதன் தலைமையில் வார இறுதி ஆங்கில வகுப்பு ஆரம்பித்து வைக்கப் படவுள்ளது. 18

## இன்று ஆய்வுப் பேருரை

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் நிர்வாக திருமதி மனோன்மணி - சண்முகதாஸ் அவர்கள் "தமிழரின் மொழி கலை, பண்பாடுகளுடன் யப்பானியர் கொண்டுள்ள இசைவாக்கம் ஒருவகை ஆய்வு" என்னும் பொருள் பற்றி யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 30 மணிக்கு ஆய்வுப் பேருரை நிகழ்த்தவுள்ளார்.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லட்சுமி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 15. 08- 92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது